(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 75.]

பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2019 யூலை 10, புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு

சமுகமளித்தோர்:

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

கௌரவ செல்வம் அடைக்கலநாதன், குழுக்களின் பிரதித் தவிசாளர்

கௌரவ ரணில் விக்கிரமசிங்க, பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்

கௌரவ வஜிர அபேவர்தன, உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

கௌரவ ஜோன் அமரதுங்க, சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

கௌரவ கயந்த கருணாதிலக்க, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

கௌரவ ரவி கருணாநாயக்க, மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ அகில விராஜ் காரியவசம், கல்வி அமைச்சர்

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல, அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

கௌரவ மனோ கணேசன், தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவலகள் அமைச்சர்

கௌரவ பழனி திகாம்பரம், மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா, புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ ஹரின் பர்னாந்து, தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார, பொது நிருவாகம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்

கௌரவ திலக் மாரபன, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

கௌரவ சாகல ரத்நாயக்க, துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ அர்ஜுன ரணதுங்க, போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க, மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ மலிக் சமரவிக்ரம, அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

கௌரவ அப்துல் ஹலீம், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

கௌரவ கபீர் ஹஷீம், நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ பி. ஹரிசன், கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சர்

கௌரவ ருவன் விஜேவர்தன, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற வெகுசன ஊடக அமைச்சரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும்

கௌரவ ரவீந்திர சமரவீர, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

கௌரவ சுஜீவ சேனசிங்க, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

கௌரவ அசோக் அபேசிங்க, போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல, உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே, சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ வசந்த அலுவிஹாரே, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

கௌரவ லக்கி ஜயவர்தன, நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ ஏ. டி. பிரேமதாச, மின்வலு, புதுப்பிக்கத்தக்க சக்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன், கல்வி இராஜாங்க அமைச்சர்

கௌரவ அஜித் மான்னப்பெரும, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ இரான் விக்கிரமரத்ன, நிதி இராஜாங்க அமைச்சர்

கௌரவ திலிப் வெதஆரச்சி, கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ வடிவேல் சுரேஷ், பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

கௌரவ வசந்த சேனாநாயக்க, வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ எட்வட் குணசேகர, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு பிரதி அமைச்சர்

கௌரவ புத்திக பத்திறண, கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ கருணாரத்ன பரணவிதான, திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரதி அமைச்சர்

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன

கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன

கௌரவ சிசிர குமார அபேசேகர

கௌரவ மஹிந்த அமரவீர

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ ஆனந்த அலுத்கமகே

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்

கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ வேலு குமார்

கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்

கௌரவ சந்திரசிறி கஜதீர

கௌரவ சந்திம கமகே

கௌரவ பியசேன கமகே

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர

கௌரவ எஸ். எம். சந்திரசேன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ சிசிர ஜயகொடி

கௌரவ மலித் ஜயதிலக

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ

கௌரவ அநுராத ஜயரத்ன

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ தயாசிறி ஜயசேகர

கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன

கௌரவ மயில்வாகனம் திலகராஜா

கௌரவ க. துரைரெட்ணசிங்கம்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ எம்.எஸ். தௌபீக்

கௌரவ சிறினால் டி மெல்

கௌரவ பியல் நிசாந்த த சில்வா

கௌரவ நிமல் சிறிபால த சில்வா

கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ வீரகுமார திசாநாயக்க

கௌரவ சாலிந்த திசாநாயக்க

கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ எஸ். பீ. நாவின்ன

கௌரவ மனுஷ நாணாயக்கார

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ முஹம்மது நசீர்

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண

கௌரவ கே.கே. பியதாஸ

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ சனத் நிசாந்த பெரேரா

கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா

கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த

கௌரவ எஸ். பிரேமரத்ன

கௌரவ பாலித ரங்கே பண்டார

கௌரவ சாந்த பண்டார

கௌரவ இந்திக பண்டாரநாயக்க

கௌரவ பந்துல லால் பண்டாரிகொட

கௌரவ தாராநாத் பஸ்நாயக்க

கௌரவ தாரக்க பாலசூரிய

கௌரவ விஜித பேருகொட

கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ அப்துல்லா மஹரூப்

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண

கௌரவ பைஸர் முஸ்தபா

கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா

கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ சீ. பீ. ரத்நாயக்க

கௌரவ லொஹான் ரத்வத்தே

கௌரவ பிரசன்ன ரணதுங்க

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ ரொசான் ரணசிங்க

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ, பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ

கௌரவ அங்கஜன் இராமநாதன்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ விதுர விக்கிரமநாயக்க

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன

கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க

கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன

கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ கஞ்சன விஜேசேகர

கௌரவ துலீப் விஜேசேகர

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ தேனுக விதானகமகே

கௌரவ ச. வியாழேந்திரன்

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ குமார வெல்கம

கௌரவ சி. சிறீதரன்

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ மஹிந்த சமரசிங்க

கௌரவ சந்தித் சமரசிங்க

கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்

கௌரவ ஈ. சரவணபவன்

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்

கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்

கௌரவ முத்து சிவலிங்கம்

கௌரவ அண்ணாமலை நடேசு சிவசக்தி

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன

கௌரவ மாவை சோ. சேனாதிராசா

கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன

கௌரவ செஹான் சேமசிங்க

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி

கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்

கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்

கௌரவ கனக ஹேரத்

கௌரவ விஜித ஹேரத்

கௌரவ ஏ. எச். எம். பௌஸி

கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1. பத்திரங்கள் சமர்ப்பித்தல்: (1) பிரதிச் சபாநாயகர் —

(i) இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 41ஆ(6) உறுப்புரையின் பிரகாரம், 2019 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டிற்கான (2019.01.01-2019.03.31) நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 41ஆ (6) மற்றும் 55(5) உறுப்புரைகளின் பிரகாரம், 2019 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டிற்கான (2019.01.01-2019.03.31) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் —

(i) 2018 ஆம் ஆண்டுக்கான திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் செயற்திறன் பெறுபேற்று அறிக்கையும் கணக்கும்;

(ii) 2018 ஆம் ஆண்டுக்கான கம்பஹா மாவட்ட செயலகத்தின் செயலாற்றுகை மற்றும் கணக்குகள் அறிக்கை; மற்றும்

(iii) 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் —

(i) 2016 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் ஆண்டறிக்கை;

(ii) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபையின் ஆண்டறிக்கைகள்; மற்றும்

(iii) 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை பெண்கள் மற்றும் பால்நிலை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல் : (1) உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ காமினி லொக்குகே சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ நிஹால் கலப்பத்தி அக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

(i) 2017 ஆம் ஆண்டுக்கான காலி மாவட்டச் செயலகத்தின் வருடத்தின் செயற்றிட்ட அறிக்கையும் கணக்குகளும்;

(ii) 2017 ஆம் ஆண்டுக்கான கேகாலை மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையும் கணக்குகளும்;

(iii) 2017 ஆம் ஆண்டுக்கான அம்பாறை மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயலாற்றறிக்கையும் கணக்குகளும்;

(iv) 2017 ஆம் ஆண்டுக்கான மாத்தறை மாவட்ட செயலகத்தின் செயற்திறன் அறிக்கையும் கணக்கும்;

(v) 2017 ஆம் ஆண்டுக்கான பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையும் கணக்குகளும்;

(vi) 2017 ஆம் ஆண்டுக்கான அநுராதபுர மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயற்திறன் அறிக்கையும் வருடாந்த கணக்குகளும்;

(vii) 2017 ஆம் ஆண்டுக்கான ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையும் கணக்கும்;

(viii) 2017 ஆம் ஆண்டுக்கான இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் செயற்பாட்டு அறிக்கையும் கணக்கு அறிக்கைகளும்;

(ix) 2017 ஆம் ஆண்டுக்கான நுவரெலியா மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயற்பாட்டு அறிக்கையும் கணக்குகளும்;

(x) 2017 ஆம் ஆண்டுக்கான கம்பஹா மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையும் கணக்குகளும்;

(xi) 2017 ஆம் ஆண்டுக்கான வவுனியா மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயல்திறன் மதிப்பீட்டு அறிக்கையும் கணக்குகளும்;

(xii) 2017 ஆம் ஆண்டுக்கான புத்தளம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயலாற்றறிக்கையும் கணக்குகளும்;

(xiii) 2017 ஆம் ஆண்டுக்கான பதுளை மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயற்றிறன் அறிக்கையும் கணக்குகளும்;

(xiv) 2017 ஆம் ஆண்டுக்கான மொனராகலை மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயற்றிறன் அறிக்கையும் கணக்குகளும்;

(xv) 2017 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையும் கணக்குகளும்;

(xvi) 2017 ஆம் ஆண்டுக்கான களுத்துறை மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயல்திறன் அறிக்கை மற்றும் கணக்குகள்;

(xvii) 2017 ஆம் ஆண்டுக்கான மன்னார் மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயற்திறன் அறிக்கையும் கணக்குகளும்;

(xviii) 2017 ஆம் ஆண்டுக்கான கண்டி மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையும் கணக்கு அறிக்கையும் ;

(xix) 2017 ஆம் ஆண்டுக்கான கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயற்திறன் அறிக்கையும் வருடாந்த கணக்கு அறிக்கையும்;

(xx) 2017 ஆம் ஆண்டுக்கான முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயற்பாட்டு அறிக்கையும் கணக்குகளும்;

(xxi) 2017 ஆம் ஆண்டுக்கான குருணாகல் மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயலணி அறிக்கையும் கணக்குகளும்;

(xxii) 2017 ஆம் ஆண்டுக்கான திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயற்திறன் பெறுபேற்று அறிக்கையும் கணக்கும்;

(xxiii) 2017 ஆம் ஆண்டுக்கான மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயல்நிறைவேற்று அறிக்கையும் கணக்கு அறிக்கையும்

(xxiv) 2017 ஆம் ஆண்டுக்கான கொழும்பு மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையும் கணக்குகளும்;

(xxv) 2017 ஆம் ஆண்டுக்கான மாத்தளை மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயற்றிறன் அறிக்கைகளும் கணக்குகளும்;

(xxvi) 2017 ஆம் ஆண்டுக்கான உள்நாட்டலுவல்கள் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையும் கணக்குகளும்;

(xxvii) 2017 ஆம் ஆண்டுக்கான பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் செயல்திறன் அறிக்கை மற்றும் கணக்குகள்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

3. பிரதம அமைச்சர், அமைச்சரவை உள்ளிட்ட அரசாங்கம் மீதான நம்பிக்கையின்மை: கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ ஆமோதிக்க கௌரவ அநுர திசாநாயக்க சமர்ப்பித்த பிரேரணை,— 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற தற்கொலை பயங்கரவாத தாக்குதல்கள் காரணமாக இலங்கைப் பிரசைகள் உள்ளிட்ட இருநூற்றைம்பதுக்கு மேற்பட்ட எண்ணிக்கையானோர் படுகொலை

செய்யப்பட்டமை, மேலும் ஐநூறுக்குக் கிட்டிய எண்ணிக்கையுடையோர் காயமடைந்தமை மற்றும் மேற்படி குண்டுத் தாக்குதல் காரணமாக ஏற்பட்ட ஆதனச் சேதம் தொடர்பில் பிரதம அமைச்சர், அமைச்சரவை மற்றும் அரசாங்கத்திற்கு உத்தியோகபூர்வரீதியாக தகவல்கள் கிடைத்திருந்தபோதிலும் வன்மமான உதாசீனத்துடன் கீழே குறிப்பிட்ட செயல்களைப் புரிந்தமை அல்லது புரியாமல் விட்டமையால் :—

(அ) 2019.05.08 ஆம் திகதி பிரதம அமைச்சர் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிலிருந்து ஐஎஸ்ஐஎஸ் (ISIS) சர்வதேச இஸ்லாம் தீவிரவாத அமைப்புடன் இலங்கையைச் சேர்ந்த குழுவினர் உறவுகளைப் பேணிவந்ததாகவும் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்ததாகவும் அறிந்திருந்தும் அது சம்பந்தமாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியமை;

(ஆ) பல்வேறு இஸ்லாம் சமய தீவிரவாத அமைப்புகள் முஸ்லீம் சமூகத்தில் இயங்கி வருவதாக முஸ்லீம் சமுதாயத்தினராலேயே பல்வேறு விதத்தில் அரசாங்கத்திற்கும் பொறுப்புக்கூறவேண்டிய நிறுவனங்களுக்கும் விழிப்புணர்வூட்டி இருக்கையில் அது சம்பந்தமாக செயலாற்றத் தவறியமை;

(இ) காத்தான்குடி பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள்மீது பல்வேறு சந்தர்ப்பங்களில் விடுத்துள்ள எச்சரிக்கைகள் மற்றும் தாக்குதல்கள் தொடர்பாக 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி குண்டு வெடிக்கச் செய்வித்து இறந்த சஹரான் ஹஷீம் மற்றும் 2019 ஏப்ரல் 26 ஆம் திகதி சாய்ந்தமருதுவில் குண்டு வெடிக்கச் செய்வித்து இறந்த ஏ.எல்.எம். நியாஸ் ஆகியவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தினால் பிடியாணை விடுத்துள்ள போதிலும் மற்றும் மேற்படி பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் காத்தான்குடி பிரதேசத்தில் வெளிப்படையாகவே பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடும் போது அவர்களை கைதுசெய்யவோ அல்லது உரிய சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளவோ தவறியமை;

(ஈ) 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 24 ஆம் திகதி மாவனெல்லயில் புத்தர் சிலைகளை சேதப்படுத்தல் தொடர்பாக சஹரான் ஹஷீம் முதன்மையாகக்கொண்ட குழுவொன்றுக்கு தொடர்பு இருப்பதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் பேரவையினால் தேசிய புலனாய்வு பிரிவிற்கு 2018 திசெம்பர் 28 ஆம் திகதி அறிவித்துள்ள போதிலும் மற்றும் இத்தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் சிலர் கைதுசெய்யப்பட்ட போதிலும் விசாரணைகள் முன்னெடுப்பதைத் தடுத்து அதில் தலையீடுகள் மேற்கொண்டதாக அரசாங்கத்தின் அமைச்சரொருவரை குறிப்பிட்டிருந்தமை;

(உ) மேற்படி தாக்குதல்களுக்கு கணிசமான காலத்திற்கு முன்பிருந்தே இலங்கைக்குள் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளின் பல்வேறு செயற்பாடுகள் தொடர்பாக விசேடமாக கணிசமான எண்ணிக்கைகொண்ட இலங்கையர் ஐ.எஸ்.ஐ.எஸ். (ISIS) அமைப்பில் சேர்ந்து செயற்படுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான சட்டரீதியான மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளத் தவறியமை;

(ஊ) பாதுகாப்பு சபையின் அங்கத்தவராகிய பிரதம அமைச்சர், பாதுகாப்புச் சபை கூட்டத்தொடர்களில் கலந்து கொள்ளாமையின் மூலம் நாட்டு மக்களுக்கு அவரால் ஆற்றப்பட வேண்டிய அடிப்படைப் பொறுப்புகளைத் தவறவிட்டமை;

(எ) இலங்கையில் கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களை இலக்குவைத்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், இதனுடன் தொடர்புடைய நபர்கள் மற்றும் அவர்களது தொலைபேசி இலக்கங்கள், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் உள்ளிட்ட உரிய தகவல்கள் வெளிநாட்டு புலனாய்வு சேவைகளினால் வழங்கப்பட்டிருக்கையில், அத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்வதைத் தவறவிட்டமை;

மேலும் 2019.04.21 ஆம் திகதி, குறிப்பிட்ட தாக்குதல்களுக்கு முன்னதாக குறிப்பிட்ட வெளிநாட்டு புலனாய்வு சேவைகள் மீண்டும் இத் தாக்குதல்கள் தொடர்பில் திட்டவட்டமான முன்னெச்சரிக்கைகளை விடுத்திருக்கையில் இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதைத் தவறவிட்டமை;

(ஏ) 2019.04.11 ஆம் திகதி பிரதி பொலிஸ் மா அதிபர் - விஷேட பாதுகாப்பு பிரிவின் திரு. பிறியலால் தசநாயக்க, "Information of an alleged plan attack" எனும் தலைப்பு மற்றும் DIG/SPR/126/4.19 ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம், 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி திட்டவட்டமான இடங்களை இலக்குவைத்து திட்டமிடப்பட்ட கொலைத் தாக்குதல் இடம்பெறுமென அதாவது “தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் மொஹமட் சஹரான் இந்நாட்டில் தற்கொலைத் தாக்குதல் ஒன்றை நடாத்துவதற்கு திட்டமிடுவதாக கிடைத்த தகவல் தொடர்பாக அரச புலனாய்வு சேவையினால் வழங்கப்பட்டிருந்த அறிக்கையில் உள்ளடங்கிய விடயங்கள் தொடர்பாக விசேட கவனத்தினைச் செலுத்தி" எனப்படும் கடிதம் பின்வரும் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள அதாவது;

- பணிப்பாளர்/ அமைச்சர் பாதுகாப்புப் பிரிவு
- பணிப்பாளர்/ நீதித்துறை பாதுகாப்புப் பிரிவு
- பணிப்பாளர்/ ஓய்வு பெற்ற சனாதிபதி பாதுகாப்புப் பிரிவு
- பதில் பணிப்பாளர்/ தூதுவர் பாதுகாப்புப் பிரிவு (iv)
- பதில் பணிப்பாளர்/ ஓய்வு பெற்ற சனாதிபதி பாதுகாப்புப் பிரிவு (V)

ஆகியோருக்கு முதலில் வழங்கப்பட்டிருத்தலும் அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது புறக்கணிக்கப்பட்டிருத்தலும் ஆகிய மேற்படி விடயங்களின் பிரகாரம் 2019.04.21 ஆம் திகதி சிவில் மக்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைக் கட்டாயமாகத் தடுப்பதற்கு அல்லது சேதத்தினைக் குறைத்துக் கொள்ள இயலுமானதாக இருந்ததனாலும்;

(ஐ) 2019.04. 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தொடர் தாக்குதலின் பின்னர் பிரதம அமைச்சர் மற்றும் அமைச்சர்கள் அத்தாக்குதல் தொடரின் பொறுப்பினை ஏற்காமல் அப்பொறுப்பினை வேறு தரப்புகளுக்குச் சாட்டுவதற்கு முயற்சித்துக்கொண்டு, அரசாங்கத்தின் அமைச்சர்கள் பொறுப்பற்றதும், ஒன்றுக்கொன்று முரணானதும் பொய்யானதுமான கூற்றுக்களை முன்வைத்து நாட்டின் இயல்பு வாழ்க்கை மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு என்பன தொடர்பாக குழப்பமானதும் பாதுகாப்பற்றதுமான நிலைமை ஏற்படக்கூடிய வகையில் செய்யப்பட்டுள்ளதனாலும்;

(ஒ) 2019.04.21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தொடர்பான புலனாய்வுச் செயன்முறைக்கு தடைகளை ஏற்படுத்தியும், அக் குற்றச்செயல்கள் தொடர்பாக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தடைகளை ஏற்படுத்தியும் அல்லது தடுத்தும் அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் செயற்பட்டுள்ளதனாலும்;

(ஓ) 2019.04.21 திகதி மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தொடர் தாக்குதல்களின் பின்னர் மீண்டும் அவ்வாறானதொரு தொடர் தாக்குதல் மேற்கொள்ளப்படுதல் அல்லது வேறு வகையிலான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுவதை தடுப்பதற்கு அவசியமான பூரணமான சட்டங்கள் இலங்கை அரசிடம் காணப்பட்ட போதும், 2019.05.13 திகதி கம்பஹா பிரதேசத்திலும் வடமேல் மாகாணத்திலும் மேற்கொள்ளப்பட்ட தீவிரவாத வன்முறைச் சம்பவங்கள் அதாவது

ஆட்கொலைகள், சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் மக்களிடையே மோதல்கள் ஏற்படுவதை தடுப்பதற்காக உரிய கவனத்துடனும் பொறுப்புடனும் நடந்துகொள்ளாமை அத்துடன் அவ்வாறான சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்கு எடுக்கவேண்டிய உரிய வழிமுறைகளை முறையாக பின்பற்றாததால் பொதுமக்கள் தொடர்பில் அரசாங்கத்தால் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் உரிய முறையில் நிறைவேற்றப்படுவதை தவறவிட்டமை அத்துடன் 2019.04.21 திகதி நடத்தப்பட்ட தொடர் தாக்குதல்களின் பின்னர் நாட்டிலுள்ள பல்லின மக்களிடையே அமைதியின்மை மற்றும் தாக்குதல்களில் ஈடுபடுவதற்கான முனைப்பு காணப்பட்ட போதும் அவ்வாறான தாக்குதல்களை தடுக்க நடவடிக்கை எடுக்காததாலும்;

(ஔ) மேற்சொல்லப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ள நிலையில் நாட்டின் வழமையான பொருளாதார செயற்பாட்டினை மீண்டும் கட்டியெழுப்புவதில் தோல்வி கண்டுள்ளதாலும், நாட்டில் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் கல்விச் செயற்பாடுகளை மீண்டும் கட்டியெழுப்பத் தவறியுள்ளதாலும், அரச மற்றும் தனியார் துறையின் செயற்பாடுகளை மீள இயல்பு நிலைக்கு கொண்டு வர தவறியுள்ளதாலும் அரசாங்கம் என்ற வகையில் நாட்டு மக்களுக்கு தாம் ஆற்ற வேண்டிய பொறுப்புகளையும் கடமைகளையும் ஆற்றுவதற்கு தவறியுள்ளதாலும்; மற்றும்

2019.04.21 ஆம் திகதியன்று இடம்பெற்ற தொடர் தாக்குதல்களை தடுக்க தவறியுள்ள காரணத்தினாலும் அதைத் தொடர்ந்தும் கூட நாட்டின் பாதுகாப்பு நிலைமை மற்றும் சிவில் மக்கள் வாழ்வை இயல்பு நிலைக்கு கொண்டு வராத காரணத்தினால் ஏற்பட்டுள்ள அராஜக நிலைமையின் பேரில் நாட்டின் உள்ளக நடவடிக்கைகளில் தலையீடு செய்வதற்கு வெளிநாடுகளுக்கு இடமளிக்கும் வகையில் செயற்பட்டுள்ளதாலும்;

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதம அமைச்சர், அமைச்சரவை உள்ளிட்ட அரசாங்கம் மீது இனியும் நம்பிக்கை இல்லை என இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுமாக.

(பி.ப. 1.20 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ வேலு குமார் தலைமை தாங்குவாராக” என போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.27 மணிக்கு கௌரவ வேலு குமார் தலைமை தாங்கினார்.)

“கௌரவ க. துரைரெட்ணசிங்கம் தலைமை தாங்குவாராக” என போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.34 மணிக்கு கௌரவ க. துரைரெட்ணசிங்கம் தலைமை தாங்கினார்.)

“கௌரவ ஹேஷா விதானகே தலைமை தாங்குவாராக” என அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.32 மணிக்கு கௌரவ ஹேஷா விதானகே தலைமை தாங்கினார்.)

“கௌரவ பிமல் ரத்நாயக்க தலைமை தாங்குவாராக” என அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.34 மணிக்கு கௌரவ பிமல் ரத்நாயக்க தலைமை தாங்கினார்.)

"விவாதம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக" என அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதிலிருந்து விவாதம் 2019 யூலை 11 ஆம் திகதி வியாழக்கிழமை தொடரும்.

4. ஒத்திவைப்பு : "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம் பி.ப. 5.40 மணிக்கு, 2019 யூலை 11 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.30 வரை ஒத்திவைக்கப்பட்டது.